-----------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழி அபிப்பிராயம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (“அதிகாரசபை”) 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 16(ஆ) பந்தியின் பிரகாரம், ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளின் கிரயமானது, சொத்துக்களை முகாமையின் நோக்கத்திற்கு செயற்படும் இயளளவிற்கு ஏற்ற வண்ணம் அதனை அதன் இருப்பிடத்திற்கு கொண்டு வருவதற்கு நேரடியாகக் தாக்கல் செய்யப்படும் எந்தச் கிரயத்தினையும் உள்ளடக்குகின்றது. அதன் பிரகாரம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு ரூபா.446,509,332 தொகையில் மேற்கொள்ளப்பட்ட செலவானது ஆதனம் பொறி மற்றும் | யாழ் சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கான கொடுப்பனவுகள் இன்னும் நிறைவடையவில்லை, மேலும் சொத்துக்களை ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களினுள் எடுத்துக்கொள்வதற்கான பூர்த்தி செய்தமைக்கான சான்றிதழ் வழங்கப்படவில்லை. | யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம், அது செயல்படும் திறனுக்கு அவசியமான நிபந்தனையாக கருதப்படுகிறது. இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம், கட்டுப்பாட்டு இடர் மற்றும் சொத்துக்களின் பயன்கள் அதிகாரசபைக்கு மாற்றப்படும் போது, ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் கீழ் கணக்கு வைப்பதற்கு பதிலாக குறை வேலையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது, இருந்தும் கூட, அதன் செயல்பாடு 12 திசெம்பர் 2022 அன்று தொடங்கப்பட்டிருந்தது. | | அவற்றைக் கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு 03 அல்லது 05 வருடங்களுக்கு ஒருமுறை ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2002 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா. 576,826,244 கிரயத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் அதிகாரசபையால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் மட்டுமே தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டுக்குள் நிலங்களை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அதிகாரசபை இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இற்கு இணங்க வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 36 ஆம் பந்தியின் பிரகாரம், ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படி மீள்மதிப்பீடு செய்யப்பட்டால், அந்தச் சொத்தின் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முழு வகுப்பும் மீள் மதிப்பீடு செய்யப்படும். எனினும், சொத்து வகுப்பின் ஒரு பகுதி மட்டுமே மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது மற்றும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து வகுப்பைச் சேர்ந்த ரூபா. 218,533,616 மதிப்புள்ள சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு அறிக்கையில், முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களை அதிகாரசபை மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை என்று கணக்காய்வாளர் நாயகம் அவதானித்திருந்தார். அதன்பிரகாரம், முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களை மட்டும் மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. உங்கள் அவதானிப்பின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் காணிகளை மறுமதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட அல்லது சொத்துக்கள் இல்லை, ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் இன் ஒரு உருப்படி மீள்மதிப்பீடு செய்யப்பட்டால், அந்தச் சொத்தைச் சேர்ந்த ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முழு வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யப்படும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்தரு ஆயட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படும் மற்றும், எதிர்பார்ப்புகள் முந்தைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், மாற்றம் இலங்கை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் கணக்கிடப்படும். எவ்வாறாயினும், 31 | (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் மட்டுமே தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. உங்கள் அவதானிப்பின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போதான மிகுதி சொத்துக்களை | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியினை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | டிசம்பர் 2022 இன் பிரகாரம் 614 உருப்படிகளுடன் தொடர்புடைய ரூபா.50,159,458 பெறுமதியுள்ள சொத்துக்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு கணக்கீட்டு நியமங்களின் படி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 86 மற்றும் 91 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபைக்கு எதிராக வெளி தரப்பினரால் மற்றும் வெளித்தரப்பினருக்கு எதிராக அதிகாரசபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான விபரங்கள் மற்றும் ஒவ்வொரு வழக்கினதும் நிதி ரீதியான தாக்கம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். அதிகாரசபை அதன்படி செயல்படவில்லை. 31 திசம்பர் 2022 இல் ஐந்து (5) சட்ட வழக்குகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. ஆனால் நியமங்களின் பிரகாரம் அதிகாரசபை வெளிப்படுத்தப்படுத்தியிருக்கவில்லை. மேன்முறையீட்டுச் செலவுக்காக நீதிமன்றத்தில் வைப்புத்தொகையாக ரூபா.2,405,039 தொகையினை அதிகாரசபை செலுத்தியுள்ளது. வழக்குச் செலவுகளை தனித்தனியாக அடையாளம் காணாமல் ஏனைய கடன்படடோர்களின் கீழ் அது கணக்கிடப்பட்டது. | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 86 மற்றும் 91 ஆம் பந்தியினை பின்பற்ற வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வழிகாட்டல் எண் EL/01/2022 இன் பந்தி 05 ன் பிரகாரம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் வாரந்தோறும் அறிவிக்கப்படும் நாணயமாற்று விகிதத்தை புறப்படுகை தீர்வை (Embarkation Levy) மாற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும். விற்பனை திகதியில் உள்ள மாற்றத்திற்காக நாணயமாற்று விகிதம் பயன்படுத்த வேண்டிய போதிலும் , தவறான மாற்று விகிதங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக, 2022 மார்ச் 01 முதல் ஜூலை 15 வரையான காலப்பகுதியில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து அதிகாரசபை ரூபா. 496,424,251.74 அதிகமாக தொகையினை வசூலித்திருந்தது. இந்த அறிக்கையின் திகதி | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இந்த மேலதிகமான கொடுப்பனவை தவறுதலாக செலுத்தியுள்ளது. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திடம் இருந்து பெரும் தொகை யொன்று நிலுவையாக காணப்படுகின்றது. நிலுவைத் தொகைக்கு எதிராக மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவை ஈடு | புறப்படுகை தீர்வையினை (Embarkation Levy) சரியாகக் கணக்கீடு செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு மற்றும் அதற்கமைவாக கணக்குவைக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| வரையிலுத் இந்தத் தொகை மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான புறப்படுகை தீர்வை (Embarkation Levy) சேகரிப்பில் 2.5 சதவீதமான சேவைக் கட்டண வருமானம் ரூபா. 3,061,282.89 தொகையினால் மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | செய்வவதற்கு விமான நிறுவனத்தின் அனுமதியை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை கோரியுள்ளது. |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப நிறுத்தி வைத்த இலாப மீதி | 4,029,697,348 | 7,731,684,323 | 3,701,986,977 | பதில்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்க வில்லை | வேறுபாடு இனங்காணப்பட்டுகணக்கு வைக்கப்படல் வேண்டும் |

### 1.5.4 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கலின் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 22 மே 2008 திகதியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் (விசேட) 1550/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் ஒழுங்குமுறை 07 மற்றும் 08 இன் பிரகாரம் இலங்கையில் இருந்து வெளிவரும் விமானப் பயணத்திற்காக இலங்கைக்கு வெளியே வழங்கப்படும் அல்லது விற்கப்படும் ஒவ்வொரு பயணிகளுக்கான பயணச்சீட்டுக்கும் 60 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு இணையான தொகை மிகை கட்டணமாக வசூலிக்கப்படல் வேண்டும் மற்றும் அவ்வாறு விதிக்கப்பட்ட கூடுதல் கட்டணத்தை திரண்ட நிதியில் செலவு வைக்க வேண்டும். எவ்வாறாயினும், 2008 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் வசூலிக்கப்பட்ட மொத்த மிகைக் கட்டணம் ரூபா.16,981,667,778 அதிகாரசபையால் திரண்ட நிதியில் செலவு வைக்கப்படாமல் அதிகாரசபையின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், 2002 முதல் 2007 வரையிலான ஆண்டு காலகட்டத்தில் வசூலிக்கப்பட்ட மிகைக கட்டணங்கள் திரண்ட நிதியில் செலவு | விமான நிறுவனத்திடமிருந்து வெளிநாட்டு விற்பனை மிகை கட்டணமாக வசூலிக்கப்படும் தொகையை அதிகாரசபையின் நிதியில் செலவு வைப்பதன் மூலம் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் (DGCA) இந்தச் சட்டத்தின் பிரிவு 12 (2) (இ) இன் பிரகாரம் செயல்பட்டார், DGCA க்கு அதிகாரசபையின் நிதியைத் தவிர, நேரடியாக கருவூலத்திற்கு அனுப்புதல் மற்றும் சேகரித்தலின் பொருட்டு எந்தவொரு சேகரிப்புக் கணக்கையும் பேணுவதற்கு அதிகாரம் இல்லை. மேற்குறிப்பிட்ட மிகைக் கட்டணம் என்பது கட்டணமோ அல்லது வரியோ இல்லை என்பதால், எந்த நிதிச் சட்டத்தின் கீழும் வர்த்தமானி செய்யப்படவில்லை. 2008 | வர்த்தமானியின் பிரகாரம், பயணிகள் டிக்கெட்டுகளை வழங்கும் அல்லது விற்கும் ஒவ்வொரு விமான நிறுவனமும், சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிடப்படும் வகையில், திரண்ட நிதிக்கு விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்தை சேகரித்து செலவு வைக்க வேண்டும். அதன் பிரகாரம் , முறையானது சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தால் பிரகடணப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த கணக்காய்வுக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. | ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் அதிகாரசபையினால் பெறப்பட்ட மொத்த OSS ரூபா. 16,981,667,778 தொகையானது, இன்றுவரை வருமான அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரசபையின் வருமானமாகக் கருதப்படுகிறது. CAASL ஆனது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 10(5) இன் பிரகாரம் ”பொது கூட்டுத்தாபனத்தின் நிகர மிகை வருமானங்களின் ஒதுக்கீட்டினை” இன்றுவரை வேறுபாடின்றி அரசாங்க திறைசேரிக்கு அனுப்பியுள்ளது. | |
| (ஆ) | அதிகாரசபையின் கையேட்டின் பிரிவு 14.5.1 மற்றும் 14.8.2 (IV) இன் பிரகாரம், சொத்துக் கடன் மற்றும் வாகனக் கடனுக்கான வட்டி விகிதம் 7 சதவீதம ஆகும். எவ்வாறாயினும், கையேட்டினை செயல்படுத்தியதன் தொடக்க காலத்தில் சொத்துக் கடன் மற்றும் வாகனக் கடனில் 4.2 சதவீதம் மட்டுமே அதிகாரசபை வசூலித்துள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் போது கடன் ரூபா. 2,108,585 தொகையான வட்டி வருமானம் அதிகாரசபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | வட்டி விகிதத்தை 4.2% ஆக குறைக்க அதிகாரசபை முடிவு செய்தது. பிரிவு 1.10 (அ) இன் பிரகாரம், SLCAP 5000 இன் எந்தப் பகுதியையும் திருத்துவதற்கு வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது, இது பொது திறைசேரியின் பொது மதிப்பாய்வின் கீழ் வரும் விடயமல்ல மற்றும் அதிகாரசபையின் கடன் தொகைகளை திருத்துவதற்கு மட்டுமே பொது திறைசேரியின் அனுமதி தேவை. | அமைச்சரவையின் அங்கீகரிக்கப்பட்ட கையேடு, அவசியமாகக் கருதப்படும்போது, அதிகாரசபையால் திருத்தப்படலாம், மேலும் கையேட்டின் 1.10 வது பிரிவின் பிரகாரம் அத்தகைய திருத்தங்களை செயல்படுத்துவதற்கு முன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரம் அவசியமாகும். |
| (இ) | சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட El/01/2022 ஆம் இலக்க வழிகாட்டலில் இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவம் ஒவ்வொரு விமான நிறுவனத்திடமிருந்தும் புறப்படுகை தீர்வையினை (Embarkation Levy) வசூலிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை. எனவே, ஒவ்வொரு விமான நிறுவனமும் அனுப்பும் புறப்படுகை தீர்வையின் துல்லியத்தை சரிபார்த்து சரிபார்க்க | CAA ஒரு படிவத்தை அறிமுகப்படுத்தியது, அதில் டிக்கெட்டுகள் வழங்கப்படும் திகதி உள்ளது. ஆனால் விமான நிறுவனங்களின் கணினி முறைமையிலிருந்து அந்த அறிக்கையை உருவாக்குவது கடினம் என்று விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. எனவே புறப்படுகை தீர்வையினை சேகரிக்கவும் சரிபார்க்கவும் | ஒவ்வொரு விமான நிறுவனத்தினாலும் அனுப்பப்படும் புறப்படுகை தீர்வையின் துல்லியத்தன்மையினை முறையான பொறிமுறையின் மூலம் அதிகாரசபை சரிபார்க்க வேண்டும். |

| | |
|---|---|
| அதிகாரசபை தவறியிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின விமான டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்ட தேதி மற்றும் விமான டிக்கெட் விற்பனையில் செலுத்தப்பட்ட ரூபா. 1,650,432,347 தொகையான புறப்படுகை தீர்வையின் துல்லியத்தை சரிபார்க்க முடியவில்லை. | " புறப்படுகை தீர்வை முகாமைத்துவ முறைமை" எனப்படும் முழு தானியங்கி முறைமையினை CAA அபிவிருத்தி செய்து வருகின்றது. இந்த முறைமை 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| | விடயம் | தோகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய வைகள் | 1,196,747,459 | உறுதிப்படுத்தல் கடிதங்கள் | கணக்காய்வு அத்தியட்சகருக்கு ஒரு நகலுடன் உறுதிப்படுத்தல்களை அனுப்புமாறு கோரி அனைத்து கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்களுக்கு கடிதங்களை அதிகாரசபை அனுப்பியுள்ளது | உறுதி செய்யப்படாத கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீது மீளாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | வியாபார பெற வேண்டியவைகள் | 1,524,761,412 | | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி திணைக்களத்திலிருந்து 31 திசெம்பர் 2022 வரையிலும் பெற வேண்டிய பெறுமதி சேர் வரி (உள்ளீட்டு வரி) ரூபா.255,416,974 ஆகும். பணத்தை மீளப் பெறுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும், இறுதி முடிவு எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த உள்ளீட்டு வரியினை வசூலிப்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. எவ்வாறாயினும், இது தொடர்பாக மீளாய்வாண்டின் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் இழப்பு அல்லது வெளிப்படுத்தல் ஆகியவற்றிற்கான எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஏற்கனவே 2016 ஆம் ஆண்டு வரையிலான வருடங்களுக்கான VAT கணக்காய்வுகளை நிறைவுசெய்து, ரூபா. 51 மில்லியன் மீளளிப்பினை வழங்குவதற்கான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. பெரிய வரி செலுத்துவோர் பிரிவு (LTU 6) 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னரான கணக்காய்வு செயல்முறையைத் ஆரம்பித்துள்ளது. | VAT மீளளிப்பானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புறப்படுகை தீர்வையின் (Embarkation Levy) சேவைக் கட்டணத்தில் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியான ரூபா. 1,567,314 தொகையானது, 01 ஒக்தோபர் 2022 முதல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டும். இருப்பினும், இது தொடர்பாக எந்த ஒதுக்கீடும் அல்லது கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | புறப்படுகை தீர்வையின் (Embarkation Levy) சேவைக் கட்டணம் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியிற்கு பொறுப்புடையதல்ல. அரசாங்கத்தால் விதிக்கப்படும் சட்டப்பூர்வ கட்டணங்கள் SSCL வரியிற்கு பொறுப்புடையதல்ல. மேலும், எம்பார்கேஷன் லெவி என்பது VAT மற்றும் SSCL க்கு பொறுப்பாக இருக்க முடியாத அரசு வரி என்று நிதிக் கொள்கை திணைக்களம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு உறுதிப்படுத்தியுள்ளது. | 18 ஒக்தோபர் 2022 திகதியிடப்பட்ட ACT 3/25 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம்<br><br>சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியான SSCL இன் 2.5% தகைமை பெற்ற விற்பனை புரள்வுடன் தொடர்புடையது. புறப்படுகை தீர்வையின் மீதான சேவைக் கட்டணம் அதிகாரசபையின் விற்பனை புரள்வாக கருதப்படுகிறது.<br><br>எனவே, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி ரூபா.1,567,314 தொகையினை அதிகார சபை செலுத்த வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டம். | | | |
| (i) பிரிவு 7(இ) | இலங்கைக்கான விமானப் போக்குவரத்து அபிவிருத்தி திட்டமொன்று அதிகாரசபையால் தயாரிக்கப்பட வேண்டும் எனினும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கூட அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய விமானப் போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் முதல் வரைவு அறிக்கையானது, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் அக்கறை உடைய தரப்பினர்களின் | 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தினை அதிகார சபை பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கருத்துக்களுக்காக CAA இன் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. | |
| (ii) | பிரிவு 9 | இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 14 வானூர்திகள் மற்றும் 08 வானூர்தி வசதிகள் மற்றும் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி தொடர்பான சொத்துக்களின் பாராதீனப்படுத்தலை 2016 ஆம் ஆண்டுக்குள் வர்த்தமானியில் வெளியீடு செய்ய அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சட்டம் அமுலுக்கு வந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில், 02 விமான நிலையங்கள் மற்றும் 07 வானூர்தி வசதிகள் மற்றும் கட்டுநாயக்க மற்றும் இரத்மலானை விமான நிலையத்துடன் தொடர்புடைய காணிகள் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டு பாராதீனப் படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் 2017 இல் வெளியிடப்பட்டது. மேலும், பலாலி விமான நிலையம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையம் தொடர்பான வர்த்தமானி முறையே 2019 மற்றும் 2022 இல் வெளியிடப்பட்டது. 2023 15 மே 2023 ஆம் திகதியில் உள்ளவாறு 21 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் , ஆனால் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீதமுள்ள விமான நிலையங்களை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சர் சொத்துக்களை வர்த்தமானியில் வெளியிடும் வரை, மூன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. 2017 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானியைத் தொடர்ந்து, CAASL ஆனது, பாராதீனப்படுத்தல் மற்றும் மாற்றுதல் செயல்முறையின் நிர்வாக செயல்முறையை நிறைவு செய்ய தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எல்லைகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், சொத்துக்களை அரச மானியமாகப் பெறுவதற்கும் தேவையான நிர்வாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை பல்வேறு அரசாங்க அமைப்புகளின் ஈடுபாட்டுடனும், தேவையான தொடர் நடவடிக்கைகளுடனும் நடைபெற்று வருவதால் இதற்கு ஒரு நீண்ட காலம் எடுக்கும். | சட்டம் நடைமுறைக்கு வந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், முதல் வர்த்தமானி அறிவிப்பு 2017ல் வெளியிடப்பட்டது.<br><br>15 மே 2023 ஆம் திகதியில் உள்ளவாறு, 21 ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனால் சொத்துக்களை பாராதீனப்படுத்தலுக்கானநடைமுறைகள் முழுமையாக முடிவடையவில்லை, எனவே அதிகாரசபையானது சொத்துக்களை பாராதீனப்படுத்தும் நடைமுறைகளில் வினைத்திறனாக ஈடுபடல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | பிரிவு 12 (1), (2), (3) | பிரிவு 12 (1) சட்டத்தின் பிரகாரம் ,சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தினை கொண்டிருக்கும் மற்றும் பிரிவு 12 (2) இன் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) இல் உள்ள கட்டணங்கள், கட்டணங்கள், விதிப்பனவுகள், நன்கொடைகள், பரிசுகள் மற்றும் மானியங்கள் மூலம் பெறப்பட்ட அனைத்துத் பணத் தொகைகளும் நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யப்படும். சட்டத்தின் பிரிவு 3 இன் படி, தேவையான செலவுகள் மற்றும் பிரிவு 12(3) இன் (அ), (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்களிப்பு ஆகியவை அதிகாரசபையின் நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்படும். எவ்வாறாயினும், 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபை தனியான நிதியத்தினை பேணி இருக்கவில்லை மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள வருமானம் மற்றும் செலவுகள் கணக்கிடப்படவில்லை மற்றும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிய கணக்கின் செயல்பாடுகள் முற்றடக்க வருமான கூற்றில் காட்டப்பட்டுள்ளன. நிதியக் கணக்கின் மீதியானது, ”நிறுத்திவைத்த இலாபம்” என நிதி நிலைமை கூற்று மற்றும் உரிமை மாற்ற கூற்று ஆகியவற்றில் காட்டுகின்றது. 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் பிரிவு 12 (2) இன் பிரகாரம் , அதன் சொந்த நிதியததை தவிர வேறு தனி நிதியத்தை பராமரிக்க அதிகார சபைக்கு எந்த ஆணையும் இல்லை. | அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் நிதியத்தினை CAASL பேணுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) 2021 நவம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | | |
| (i) | பிரிவு 2.3 | CAASL இன் செயல்முறை கையேடுகள் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கல் செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், சுற்றறிக்கையின் பிரகாரம் 44 கையேடுகளை மீளாய்வு செய்து நாளது வரையாக்கல் செய்ய அதிகாரசபை தவறியுள்ளது. | அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேட்டின் பிரிவு 2.3 இல் 05 ஆண்டுகள் பற்றி குறிப்பிடவில்லை. எனினும், 02 ஏப்ரல் 2022 அன்று நடைபெற்ற 180 வது சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம், குழு கையேட்டை மீளாய்வு செய்துள்ளது மற்றும் குழுவின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் மேலதிக செயலாக்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.<br>தொடர்புடைய ICAO வெளியீடுகள் நாளது வரையாக்கப்படும் போது மட்டுமே தொழில்நுட்பப் பிரிவுகளின் கையேடுகள் திருத்தப்படும் / மீளமைக்கப்படும். | அதிகாரசபை சுற்றறிக்கைக்கு இணங்குதல் வேண்டும். |
| (ii) | பிரிவு 3.2 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, தொழில்சார் கொடுப்பனவு ரூபா.7,387,000, ஊக்க கொடுப்பனவு ரூபா.10,062,500, முகாமைத்துவ கொடுப்பனவு ரூபா.13,800,000 மற்றும் இடைக்கால கொடுப்பனவு ரூபா.43,147,983 என மொத்தமாக ரூபா.74,397,483 தொகை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தொழில் முறை (தொழில்நுட்ப) கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. 2003 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் ஏனைய கொடுப்பனவுகளுக்கு இயக்குநர்கள் சபை அங்கீகாரம் | கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து அதிகாரசபை அங்கீகாரத்தினை பெற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரசபையின் அதிகாரிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அளித்துள்ளது. | |
| (iii) | பிரிவு 3.11 | 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 14 விமான நிலையங்கள் மற்றும் 08 வானூர்தி வசதிகள் மற்றும் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் தொடர்பான அனைத்து சொத்துக்களையும் மாற்றுவது அதிகாரசபையின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும் மற்றும் பொதுச் உடைமையான நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகளை வெளி இணைப்புச் செய்ய (out sourced) முடியாது. எனினும், அதிகாரசபையானது சுற்றறிக்கைக்கு இணங்காமல் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரை நியமனம் செய்துள்ளது. மேலும், 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட கையேட்டின் பிரிவு 3.11 இன் பிரகாரம் பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க வெளி இணைப்புச் செய்வதற்கான (out sourced) பங்காளர்களை தேர்வு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், 02 மார்ச் 2022 முதல் 01 மார்ச் 2023 வரையிலான காலத்திற்கு நியமிக்கப்பட்ட | 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் , பகுதி 11, பிரிவு 7, துணைப் பிரிவுகள் (ப) மற்றும் (ம) இன் பிரகாரம் உசாவுநர்களினதும் மற்றும் ஆலோசகர்களின் சேவையை இந்த அதிகாரசபையால் நியமனம் செய்து அந்த சேவைகளுக்கான கட்டணத்தை தீர்மானிக்க முடியும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சட்ட விதிகளின் அடிப்படையில், CAASL இன் 180வது பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் அங்கீகாரத்தின் பேரில் மேற்படி நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். | அதிகாரசபைக்கு பாராதீனப்படுத்தப் பட்டுள்ள சொத்தின் அனைத்து செயல் முறையும் அதிகார சபையின் முக்கிய நடவடிக்கைகளாகத் தெரிகின்றது. எனவே, சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகார சபை செயல்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தரை தேர்ந்தெடுத்து நியமிப்பதில் பெறுகை நடைமுறைகளை அதிகாரசபை பின்பற்றியிருக்கவில்லை. | | |
| (இ) 2022 ஏப்ரல் 26 ஆம் திகதியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரிவு 3 (கௌ) | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் 26 ஏப்ரல் 2022 முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு மாறாக அதிகாரசபையின் 60 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 33,414,981 தொகையான கடன்களினை அதிகாரசபை வழங்கியிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களின் முன்பணக் கணக்கின் கீழ் கடன் வசதிகளை வழங்குவதற்கு மட்டுமே இந்த இடை நீக்கம் பொருந்தும் என்று சுற்றறிக்கை வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றது. இந்த அதிகாரசபையானது தனது ஊழியர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளை நம்பியிருக்கவில்லை என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். இதன் விளைவாக, சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சரத்து இந்த அதிகாரசபைக்கு பொருந்தாது. | இந்த சுற்றறிக்கை பொதுக் கூட்டுத்தாபனத்திற்கு முகவரியிடப்பட்டது மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாட்டின் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. கையேடு புதுப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| (i) 215 | மீளாய்வாண்டின திசம்பர் 31 இல் உள்ளவாறு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ரூபா.12,509,901 மீதியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்தத் தொகையில் பொறி மற்றும் இயந்திர பராமரிப்புக்கு எதிராக ரூபா.1,664,056 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த முற்பணம் ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்பட்டது ஆனால் இதுவரை பணிகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | இவை ஒரு வருடத்திற்கும் மேலாக தொடரும் சேவை ஒப்பந்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட முற்பணங்களாகும். | அதிகாரசபை நிதி ஒழுங்குவிதிகள் 215 இன் பிரகாரம் செயல்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 571 | 01 ஜனவரி 2022 இல் உள்ளவாறான மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட வைப்புத்தொகை ரூபா.1,768,635 ஆகும் மற்றும் வைப்புத்தொகை வைத்திருப்பவர்களிடமிருந் து விசாரணைகள் எதுவும் இல்லாமல் மற்றும் அவர்கள் வைப்பினை கோரவில்லை என்பதை உறுதிப்படுத்தாமல் இந்த மீதியிலிருந்து ரூபா.1,283,544 மீளாய்வாண்டில் நாணாவித வருமானத்திற்கு மாற்றப்பட்டது. | இந்த அதிகாரசபை பல்வேறு அங்கீகாரங்களுக்காக வெளிநாட்டுப் பணத்தினைபெற்றுக் கொள்கின்றது மற்றும் வாடிக்கையாளர்கள் நாணயமாற்று விகித வேறுபாடுகள் மற்றும் வங்கிக் கட்டணங்களுக்காக பணத்தினை சிறிது மேலதிகமான பணத்துடன் அனுப்புகின்றனர். அந்த வாடிக்கையாளர்கள் அந்த மேலதிகமான பணத்தினை மீளப் பெறுவதில்லை. CAA அந்த வாடிக்கையாளர்களிடம் இருந்து ஏதேனும் இழப்புகளை மீட்பதற்கும் அவற்றை நாணாவித வருமானத்திற்கு மாற்றுவதற்கும் அந்த பணத்தை ”பொது - வைப்பு” கணக்கில் இன்னும் ஒரு வருடத்திற்கு வைத்திருக்கிறது. | அதிகாரசபை நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் செயல்பட வேண்டும். |
| (உ) | பணியாளர்கள் மற்றும் நிருவாக விதி முறைகளின் கையேட்டின் பிரிவு 13.3 | நிதி விதிமுறைகள் 755 இன் பிரகாரம், குறிப்பிட்ட அரசாங்கச் சொத்தினை பாதுகாப்பில் வைத்துக்கொள்வதற்கு வேறுவிதமாக ஒப்படைக்கப்பட்ட எந்த உத்தியோகத்தரும் தனது கடமைகளை இராஜினாமா செய்வதற்கு முன்னர், அவர் தனக்கு பின்னர் வாரிசாக தொடர்பவரிடம் அதனை ஒப்படைக்க வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சரவையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரசபையின் கையேட்டில் உள்ள ஏற்பாட்டின் பிரகாரம், உத்தியோகபூர்வ பயன்பாட்டிற்காக ஒரு பணியாளருக்கு வழங்கப்பட்ட உபகரணம், | CAASL இன் பணியாளர்கள விதி முறைகளின் மற்றும் நிருவாக கையேட்டின் பிரிவு 13.1 இன் கீழ் ஏற்பாடுகளை அதிகாரசபை பயன்படுத்தியுள்ளது, இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. | உத்தியோகபூர்வ பயன்பாட்டிற்காக ஒரு ஊழியருக்கு வழங்கப்பட்ட உபகரணம், கையேட்டின் பிரகாரம் விற்கப்படலாம். எனவே, உரிய உரிமையுள்ள உத்தியோகத்தருக்கு உபகரணங்கள் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். |

அவர் ஓய்வுபெறும் போது அல்லது அதிகாரசபையிலிருந்து பிரிந்து செல்லும்போது விற்கப்படலாம். அதன் பிரகாரம், எந்த உபகரணமும் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை ஆனால் மூன்று உத்தியோகத்தர்கள் அதிகார சபையிலிருந்து பிரிந்து சென்ற போது போது அவர்களுக்கு மூன்று மடிக்கணினிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,743,243,673 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 329,898,389 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 2,413,345,284 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் ரூபா 3,140,052,967 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய செயற்பாடற்ற வருமானம் ரூபா 460,516,143 ஆல் அதிகரித்தமை என்பன முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | 2022 | 2021 | முரண்கள் | % |
|---|---|---|---|---|
| | -------- | ----- | ------------- | ---- |
| | (ரூபா மில்லியன்) | (ரூபா மில்லியன்) | (ரூபா மில்லியன்) | |
| **செயற்பாட்டு வருமானம்** | 3,685,224,914 | 993,344,282 | 2,691,880,632 | 271 |
| வெளிநாட்டு விற்பனைகள் மிகைக்கட்டணம் | 3,376,434,208 | 892,315,495 | 2,484,118,713 | 278 |
| புறப்படுகை தீர்வை (Embarkation Levy) சேவைக் கட்டணம் | 227,543,076 | 33,339,951 | 194,203,125 | 582 |
| ஒழுங்குமறை சேவைகளிலிருந்தான வருமானம் | 81,247,630 | 67,688,837 | 13,558,793 | 20 |
| **செயற்பாடற்ற வருமானம்** | 583,077,759 | 134,905,424 | 448,172,335 | 332 |
| வட்டி வருமானம் | **4,268,302,673** | **1,128,249,706** | **3,140,052,967** | **278** |
| **பணியாளர் செலவினங்கள்** | 457,965,055 | 356,754,794 | 101,210,261 | 28 |
| **நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள்** | 260,886,367 | 195,510,215 | 65,376,152 | 33 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டுக்கான மொத்த வருமானம் 278 சதவீதத்திற்கு சமமான ரூபா 3,140,052,967 ஆல் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் ரூபா.3,276,434,208, திரண்ட நிதியில் வரவு வைக்கப்படாமல் அதிகார சபையின் பிரதான வருமானமாகக் கருதப்பட்டுள்ளது. இந்த வருமானம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 278 சதவீதத்திற்கு சமமான ரூபா.2,484,118,713 ஆல் அதிகரித்துள்ளது.

(ii) முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள் முறையே ரூபா.101,210,261 மற்றும் ரூபா.65,376,152 ஆகியவற்றால் அதிகரித்துள்ளன.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | 2022 | 2021 |
|---|---|---|
| | ------ | ------ |
| நடைமுறை சொத்துக்கள் விகிதம் | 1: 2.34 | 1:2.05 |
| தேறிய இலாப விகிதம் | 64% | 29% |
| உரிமையான்மை மீதான திரும்பல் விகிதம் | 42% | 7% |

(i) 2021 ஆம் ஆண்டின் நடைமுறை விகிதம் 1:2.05 ஆக இருந்தது மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் அது 1:2.34 ஆக அதிகரித்துள்ளது. திறைசேரி உண்டியல் முதலீட்டில் ரூபா.1,958,516,968 அதிகரித்தமையே இதற்கு முக்கிய காரணமாக இருக்கின்றது.

(ii) அதிகாரசபையின் வருமானம் அதிகரித்ததன் காரணமாக தேறிய இலாப விகிதம் அதிகரித்துள்ளது.

(iii) முந்தைய வருடத்துடன் ஒப்பிடுகையில் உரிமையான்மை மீதான திரும்பல் 42 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபையின் பணியாளர்கள் மற்றும் நிருவாக விதிகளின் கையேட்டின் பிரிவு 1.4 இன் பிரகாரம், CAASL இன் கூட்டமைப்பு ஆளுகையின் விதியானது பணியாளர்கள் மற்றும் நிருவாக விதிகள், கூட்டமைப்பு விதிகள் மற்றும் நிதி சார் விதிகள் போன்ற மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது, கையேட்டின் பிரகாரம் கூட்டமைப்பு (கார்ப்பரேட்) விதிகள் என்றாலும், நிதி சார் விதிகள் தனித்தனியாக வெளியிடப்பட வேண்டும். இந்த அறிக்கையின் தேதி வரை இந்த விதிகள் வெளியிடப் பட்டிருக்கவில்லை. | கூட்டமைப்பு (கார்ப்பரேட்) விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. நிதி சார் விதிகள் வரைவு செய்யப்பட்டு, உரிய அங்கீகாரம் கிடைத்த பிறகு வெளியிடப்படும். | அதிகாரசபையின் பணியாளர்கள் மற்றும் நிருவாக விதிகளின் கையேட்டின் பிரிவு 1.4 இன் பிரகாரம் அதிகாரசபை செயல்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் உள்ளடங்கிய வானூர்தி வசதிகள் மற்றும் காணிகளை குத்தகை ஒப்பந்தம் மற்றும் வாடகைக் கட்டணம் எதுவுமின்றி Airport & Aviation Services (Pvt) Ltd இற்காக பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தன. | இந்த காணிகளின் உரிமை இன்னும் CAA இற்கு மாற்றப்படவில்லை. அதன் பிறகு சொத்துக்கள் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடப்படும். | Airport & Aviation Services (Pvt) Ltd உடன் அதிகாரசபை குத்தகை ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் மற்றும் மூன்றாவது அட்டவணையில் உள்ளடக்கப்படடுள்ள ஏரோநாட்டிகல் வசதிகள் மற்றும் காணி தொடர்பாக வாடகைக் கட்டணத்தினை வசூலிக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய முற்பண தொகையான ரூபா. 173,958,796 தீர்ப்பனவு செய்யப்படாமல் ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் கூட இந்த முற்பணங்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | Airport & Aviation Services (Pvt) Ltd இந்த முற்பணங்களை இன்னும் தீர்ப்பனவு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட காலத்திற்குள் அல்லது நிகழ்ச்சித் திட்டம் நிறைவடைந்ததும் முற்பணம் தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 14 வானூர்திகள் மற்றும் வானூர்தி வசதிகளை வழங்குவது தொடர்பாக CAASL மற்றும் நியமிக்கப்பட்ட அதிகாரி இடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், நியமிக்கப்பட்ட அதிகாரி ஒரு நாளைக்கு குறைந்தது நான்கு மணிநேரம் பணிபுரிந்திருந்தால் நிறைவு செய்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூபா.2,000 செலுத்த வேண்டும். எனினும், வேலை தளங்கள் மற்றும் ஏனைய அலுவலகங்களில் அதிகாரி தனது கடமைகளை மேற்கொள்வதனால், நியமிக்கப்பட்ட அதிகாரி மேலே குறிப்பிட்டபடி பணிபுரிந்தாரா என்பதை உறுதிப்படுத்த | நியமிக்கப்பட்ட அலுவலர்கள் வருகையைக் குறிக்கத் தேவையில்லை மற்றும் அவர்களின் வேலைப் பணிகள் பிரிவுத் தலைவர்களால் கண்காணிக்கப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக இந்த அதிகாரிக்கு ஒதுக்கப்பட்ட பணியினை அலுவலக அறைக்குள் வைத்து நிறைவு செய்ய முடியாது. பணிப்பாளர் சபை மாதத்திற்கு 120 மணித்தியாலங்களை அங்கீகரித்துள்ளது. 11.04.2022 ஆம் திகதி அன்று கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் 6 வது பிரிவு திருத்தப்பட்டுள்ளது மற்றும் | வேலையின் அடிப்படையில் பணம் செலுத்தப்படவில்லை மற்றும் வேலை நேரத்தில் பணம் செலுத்தப்பட்டது. எனவே வேலையின் நேரத்தை உறுதி செய்ய வருகைப்பதிவினை பராமரிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடியவில்லை.<br>மேலும், வருகை மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றிய விவரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு கொடுப்பனவு செய்த ரூபா.13,000,000 தொகையின் துல்லியத்தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும், ஒப்பந்தத்திற்கு முரணாக ரூபா.92,340 தொகையான போக்குவரத்துச் செலவுகள் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தன. | தேவை ஏற்படும் போது போக்குவரத்து கொடுப்பனவு CAASL ஆல் வழங்கப்படும். | |
| (ஆ) உள்நாட்டு விமானப் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்காக, 2016 தேசிய வரவு செலவுத் திட்டத்தில் PPP ஏற்பாடுகள் மூலம் திகன, பதுளை மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் மூன்று புதிய உள்நாட்டு விமான நிலையங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டது.<br>இதன் பிரகாரம், பதுளை விமான நிலையத்திற்கான மதிப்பாய்வுத் திட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA) தயாரிப்பதற்காக 31 டிசம்பர் 2022 ஆம் திகதி ரூபா.2,013,605 தொகையை அதிகார சபை செலுத்தியுள்ளது மற்றும் தற்போது இந்த மூன்று விமான நிலையங்களின் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. | CAA ஆனது அரசாங்கத்தின் கொள்கை தீர்மானங்களை செயல்படுத்தியது மற்றும் ஆட்சி மாற்றத்தின் காரணமாக அபிவிருத்தி பணிகள் முன்னேறவில்லை. | அபிவிருத்தியின் முனேற்றத்தை மீளாய்வு செய்ய வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் 09 எண்ணிக்கையான வதிவிட இல்லங்களை புதுப்பிப்பதற்கான செலவு மதிப்பீடு ரூபா.15,000,000 ஆகும் மற்றும் தேசிய போட்டி விலைமனு முறையின் கீழ் விலைமனு கோரலின் மீது விளம்பரக் கட்டணமாக ரூபா.282,554 செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்த | தேசிய போட்டி விலைமனு முறையின் 09 எண்ணிக்கையான வதிவிட இல்லங்களை புதுப்பிக்க விலைமனு கோரப்பட்டன, மற்றும் TEC இனால் பரிந்துரைக்கப்பட்ட வழங்குனர் ரூபா.36.5 | அதிகார சபை பெறுகை வழிகாட்டியினை பின்பற்ற வேண்டும். |

வதிவிட இல்லத்தினை புனரமைக்க ஒப்பந்ததாரரை அதிகாரசபை தெரிவு செய்யவில்லை மற்றும் அதிகாரசபை ஊழியர்களின் தொழில்நுட்ப உதவியின் மேற்பார்வையின் கீழ் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு புனரமைப்புச் செலவு ரூபா.2,666,818 தொகையாக ஏற்பட்டிருந்தது மற்றும் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கூட புனரமைப்பு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

மில்லியனை விலை கூறியிருந்தார். உள்ளக நிபுணத்துவத்தைப் பயன்படுத்தியும் பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றியும் விலை மனுவின் விலையில் 10% க்கும் குறைவான விலையில் திட்டத்தை நிறைவு செய்ய நிர்வாக தீர்மானமொன்று எடுக்கப்பட்டது.